என்று மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்களும் எடுத்துச் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் அப்துல் லத்தீப் அவர்களும், இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களும் அவை உரிமை மீறல் தீர்மானத்திற்கு அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். இது குறித்தும் விவாதத்திலே எல்லோரும் பங்குகொண்டு முடிவிலே இந்த அவை உரிமை மீறல் பிரச்சினை, தெளிவாக அவையின் மாண்பைப் பாதிக்கக்கூடிய பிரச்சின என்று எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டாலும் இங்கே நேற்று நடந்த சம்பவத்தை இதுவரை யாருமே மறுக்காத சூழ்நிலையில், இப்படிப்பட்ட சம்பவமே நடக்கவில்லை என்று முன்னாள் முதல்வர் கூறுவது அரசியலிலே மிகமிகக் கீழ்த்தரமான ஒரு நடவடிக்கை என்பது நம் அனைவருக்கும் தெரிந்திருந்தாலும், இதற்குமேல் அந்த உரிமை மீறல் பிரச்சினையிலே எந்த நடவடிக்கையும் எடுக்கப் போவதில்லை என்று முடிவு செய்து, உரிமை மீறல் பிரச்சினையை நான் ஏற்றுக்கொள்ளவில்லை என்று அறிவிக்கின்றேன்.

இந்த அளவோடு பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை *(24-3-1999)* காலை *9-30* மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-31 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

78. 1997-98-ஆம் ஆண்டிற்கான அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் (தமிழ்நாடு கோட்டம்-1) பத்தொன்பதாவது ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

79. 1997-98-ஆம் ஆண்டிற்கான அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் (தமிழ்நாடு கோட்டம்-2) ஐந்தாவது ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

1999 மார்ச் 23]

80. 1997-98-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்தின் இருபத்தி மூன்றாவது ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

81. 1997-98-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் (கோயம்புத்தூர் கோட்டம்-1) இருபத்தி ஏழாவது ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

82. 1997-98-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் (கோயம்புத்தூர் கோட்டம்-3) ஐந்தாவது ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

83. 1997-98-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் (சேலம் கோட்டம்-1) இருபத்தி ஆறாவது ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

84. 1997-98-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் (சேலம் கோட்டம்-2) பதினோராவது ஆண்டறிக்கை. (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் [மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

—ஏதுமில்லை—

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS